| | | |
|---|---|---|
| O.S No. | : | 59/2018 |
| DATE | : | 19.08.2025 |
| NAME | : | பொன்னுரங்கம் |
| Husband's Name | : | முருகன் |

வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி

6. 1ம் பிரதிவாதி தனது சொத்தை 2 முதல் 9 பிரதிவாதிகளிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். எனக்கு தமிழ் சரிவர படிக்க தெரியாது. 1ம் பிரதிவாதியின் ஆவணப்படி அவரது சொத்தின் நீளம் 205 அடி, அகலம் 16 அடி என்றால் சரிதான். 2018ல் அளவுகள் சரியாக இல்லை என்று பிரதிவாதிகள் எழுதிய திருத்தல் பத்திரம் பற்றி எனக்கு தெரியாது. 25.04.2018 அன்று 1ம் பிரதிவாதி 2 முதல் 9 பிரதிவாதிகளிடம் திருத்தல் பத்திரம் எழுதி 16 அடிக்கு 103 அடி என்று அளவுகள் சரி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும், தெரிந்திருந்தும் நான் தவறாக வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 4.5x 256 அடியை 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துவிட்டார் என்பதை காட்டுவதற்கு புகைப்படம் தாக்கல் செய்துள்ளேன்.

7. சர்வையர் வைத்து அளந்து அந்த ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. பிரதிவாதியின் நீளம் 103 அடி தான் அவ்வாறு இருக்கையில் நான் சொல்வது போல 256 அடி நீளத்தை ஆக்கிரமிப்பு செய்ய வாய்ப்பில்லை, நான் பொய்யாக வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி ராகவன் எனக்கு முன்பிருந்தே குடியிருந்து வருகிறார். 2018ல் தான் நான் ஆக்கிரமிப்பு செய்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல ஆக்கிரமிப்பு செய்ததை காட்டுவதற்கான வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும்

எனக்கும் பகை இருப்பதன் காரணமாக வேண்டுமென்றே வழக்கை தாக்கல் செய்து அவரை அலைக்கழிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

8. முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு அனுப்பிய புகாரில் குறிப்பிட்டுள்ள மகாதேவன், ரவி மற்றும் இளங்கோவன் ஆகியோரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிப்பேன். நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல, ஆகவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.